வறட்சிப் பீர்க்கு சார்ந்த உற்பத்திகள்

விடய ஆய்வு – 2022

தயாரிப்பு: எச்.எம்.என்.பீ ஹேரத்

அபிவிருத்தி உத்தியோகத்தர்

Department of Manpower and Employment

வறட்சிப் பீர்க்கு சார்ந்த உற்பத்திகள்
(விடய ஆய்வாகும்)

ஆய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல், தரவுப்பகுப்பாய்வு
எச்.எம்.நதீகா பிரியதர்ஷனீ ஹேரத்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொழிலாளர் சந்தைத் தகவல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

ஆலோசனை

அநுஷா கோகுல பிரனாந்து
பணிப்பாளர் நாயகம்
மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை
பீ. சுமித் நிஷாந்த பெரேரா
பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி)
மற்றும்

எல்.பி. லலித் குணரத்ன
பிரதிப் பணிப்பாளர்
ஊழியச் சந்தைத் தகவல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

பதிப்பு

பீ. சுமித் நிஷாந்த பெரேரா
பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி)

பக்க வடிவமைப்பு

கோஷலா காயத்திரி தெஹிகஸ்பிடிய
தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

உள்ளடக்கம்

01. அறிமுகம்.....1

02. பின்னணி.....4

03. வறட்சிப் பீர்க்கு உற்பத்தியால் தொழில் முயற்சிளை மேம்படுத்தல்.9

04 . ஆய்வின் நோக்கம் 11

05. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூலங்கள் 11

06. வறட்சிப் பீர்க்குடன் தொடர்புடைய புதிய தயாரிப்புக்கள் ... Error! Bookmark not defined.12

07. வியாபார வாய்ப்புக்கள்.....15

08. வறட்சிப் பீர்க்குளை பயிரிடல் 16

09. வறட்சிப் பீர்க்குடன் தொடர்புடைய உற்பத்திகளின் போது எழும் பிரச்சினைகள்.....18

10. தீர்வுகளும் முன்மொழிவுகளும்.....19

11. பயிர்ச் செய்கைக்கான தேவைப்பாடு 20

12. விற்பனை விலையும் வருமானமும்.....24

13. திணைக்கள எதிர்பார்ப்பு.....26

விடய ஆய்வு - வறட்சிப் பீர்க்கு

01. அறிமுகம்

இலங்கையில் விவசாயப் பயிரிடலில் சேர்க்கப்பட வேண்டிய மற்றுமொரு பெறுமதியான தாவரமாக வறட்சி பீர்க்கினை அறிமுகப்படுத்த முடியும். Luffa cylindrica என்ற விஞ்ஞானப் பெயரினால் அழைக்கப்படும் இது Cucubitaceae என்ற தாவர இன வகைக்கு உட்பட்டதாகும். இலங்கையில் மிக நன்றாக வளரும் உணவுப் பயிர்களில் வறட்சிப் பீர்க்கும் ஒரு விசேட உணவுப் பயிராகும். எந்த வறட்சியிலும் நன்றாக பலனைத் தருவதாலும், எந்த பூச்சித் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருப்பதாலும், பராமரிப்புகள் தேவைப்படாததாலும் இது ஒரு சிறப்பு வாய்ந்த பயிராகக் காணப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இந்த பயிரின் தாயகம் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் எனக் கூறப்படுவதோடு, இது பெரும்பாலும் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு தாவரமாகும். அதுமட்டுமின்றி இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸிலும் இந்த வறட்சிப் பீர்க்கு

காணப்படுகின்றன. இலங்கையில் இவ்வகையான மூன்று பீர்க்கு வகைகளைக் கண்டுகொள்ளலாம்.

1. விளிப்புப் பீர்க்கு / Luffa acutanguia
2. வறட்சிப் பீர்க்கு / Luffa aegytiaca
3. கசப்பான பீர்க்கு / Luffa amara

இவற்றில், இரண்டு வகையானவை உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன, அதே நேரத்தில் கசப்பான பீர்க்கு சாப்பிடுவதில்லை, ஆனால் அதன் இலைகள், வேர்கள், பூக்கள் மற்றும் காய்கள் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வறட்சிப் பீர்க்கு வேகமாக வளரும் ஒரு கொடியாகும். இதை மரப் பீர்க்கு, தண்ணீர்ப் பீர்க்கு என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் இலைகள் சுமார் 10-20 செ.மீ. இல் காணப்படும். பிரகாசமான மஞ்சள் நிறத்தைக் கொண்ட பூக்கள் காணப்படும். காய்கள் 15-30 செ.மீ. வரையான நீளத்தைக் கொண்டிருக்கும். காய்கள் உருளை வடிவத்தில் காணப்படுவதோடு, அதனுள்ளே கருப்பு நிறத்தில் அதிகளவிலான விதைகள் உள்ளடங்கியிருக்கும். இந்தப் பயிர்கள் வெப்பமண்டல தாழ்நிலங்களில் நன்றாக வளரும் மற்றும் கடல் மட்டத்திலிருந்து 0-1000 மீட்டர்

உயரத்தில் பயிரிட முடியும். 23-27C வெப்பநிலை மிகவும் பொருத்தமானது. ஆனால் இது 10 - 38C வெப்பநிலையைத் தாங்கும் திறனுடைய தாவரமாகும். மழை வீழ்ச்சி 1200 மிமீ - 2000 மிமீ மிகவும் உசிதமானதாக இருப்பதோடு 300 மிமீ - 3000 மிமீ வரையான மழைவீழ்ச்சியையும் தாங்கிக் கொள்ளும்.

இது நன்றாக சூரிய ஒளி படக்கூடிய இடங்களுக்கு மிகவும் பொருத்தமானது மற்றும் பொதுவாக சேதன மூலப் பொருட்கள் கொண்ட மண்ணில் நன்றாக வளரும். பயிர் நடப்பட்ட நாள் முதல் 2 மாதங்களுக்குப் பிறகு பலன் தர ஆரம்பிக்கும். சாதாரணமாக ஒரு காய் நன்றாக முதிர்ச்சி நிலைக்கு வருவதற்கு 3-4 மாதங்கள் வரை எடுக்கும். மேலும், ஒரு கொடியிலிருந்து வருடத்திற்கு கிட்டத்தட்ட 30-40 காய்களைத் தரும். பெண் பூக்கள் மற்றும் ஆண் பூக்களை கையால் செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்தால், அறுவடையை அதிகரித்துக் கொள்ளலாம். விவசாயக் காடுகளில் பெரிய மரங்களில் இந்த வறட்சி பீர்க்குவினை படருவதற்கு ஏற்றவகையில் நடலாம். வறட்சி பீர்க்குவின் மூலம் சுவையான கறி மற்றும் சூப்பினை தயாரித்துக் கொள்ள முடியும். இந்த காய்கள் நன்றாக

முதிர்ச்சியடைந்து அதிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நார் போன்ற தும்புகள் அநேகமான நாடுகளில் வர்த்தகப் பொருளாக சந்தைகளில் இருந்து கொள்வனவு செய்வதற்குள்ளதால் இந்த தாவரம் Vegetable Sponge என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றது. மேலும் இது சருமத்தை சுத்தம் செய்து பளபளக்கச் செய்யும் ஒரு சாதனமாக இருப்பதால் White people's sponge என்றும் அறிமுகப்படுத்தப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. விதைகளிலிருந்து தாவரங்களை இனப்பெருக்கம் செய்து கொள்ளலாம்.

02. பின்னணி

இன்றைய இலங்கையின் மொத்த சனத்தொகை 21 மில்லியனாக காணப்படுகின்றது. 2020 மத்திய வங்கி அறிக்கையின் படி, உழைக்கும் ஊழியர்கள் 8.467 மில்லியனாகக் காணப்படுவதோடு, அவர்களில் 7.999 மில்லியன் பேர் வேலை செய்கின்றனர். வேலையின்மை விகிதம் 5.5% ஆகக் காணப்படுகின்றது.

இலங்கையின் தொழில் சந்தையின் மிகவும் தனித்துவமான அம்சம் யாதெனில், தொழில்துறை தொழிலாளர்களின்

விகிதம் மிகக் குறைவாகக் காணப்படுவதாகும். இந்நாட்டின் மொத்த சனத்தொகை 21 மில்லியனாக இருந்தாலும், மற்றொரு நபருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ள தொழிலதிபர்கள் இரண்டரை இலட்சம் பேர்தான் உள்ளனர். இது மொத்த தொழிலாளிப் படையணியில் சுமார் 3% சதவீதமாகும். இந்த நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணிகளில் ஒன்று தொழில்முனைவோரை எண்ணிக்கை ரீதியாகவும் தரமிக்கவர்களாகவும் உருவாக்குவதாகும். தொழில் முனைவோர்களை உருவாக்குவதனால், புதிதாக வியாபாரங்கள் உருவாக்கப்படுவதோடு புதிய வேலைவாய்ப்புக்களும் உருவாக்கப்படுகின்றன. பொருளாதாரத்தில், பல செயல்பாடுகளும் இதனால் தூண்டப்படுகின்றன.

இவ்வாறு தொழில்முனைவோர்களை அதிகரிப்பதற்காக எடுக்கக்கூடிய பல நடவடிக்கைகள் உள்ளன.

- எதிர்காலத்தில் இன்னும் உருவாக்கப்படும் என, மூலோபமாக யூகிக்கப்படும்

தொழில்வாய்ப்புக்களுக்காக இந்நாட்டில் உள்ள ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.

- வியாபாரங்களைத் தொடங்குவதற்காக அவசியப்படும் பிண்ணனியைத் தயாரித்தல் மற்றும் நவீன சந்தைகளைத் தேடுதல்.
- வியாபாரத்திற்குத் தேவையான சட்ட ரீதியான அந்தஸ்தைப் பெறுவதில் உள்ள தடைகளை எளிதாக்குதல் மற்றும் தடைகளை நீக்குதல்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியமற்ற பொருட்களை உற்பத்தி செய்ய நாட்டிற்குள்ளேயே ஒரு புதிய வர்த்தக வகுப்பினரை ஊக்குவித்தல்.
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தித் தயாரிக்கக்கூடிய உற்பத்திகளை மேம்படுத்துதல் மற்றும் அதற்காக உள்ள வெளிநாட்டு சந்தைகளுக்கு புதிய தொழில்முனைவோர்களை ஈடுபடுத்தல்.
- தொழில்நுட்ப அறிவு மற்றும் உபகரணங்களை வழங்குதல்.

- தேசிய தொழிற்கல்வித் தகுதிக் கட்டமைப்பை சட்டமாக்கி, ஒவ்வொரு வேலைக்கும் தொழில்முறைச் சான்றிதழ்களைக் கொண்ட தொழிலாளர்களை மட்டுமே பணியமர்த்துதல் மற்றும் மேம்படுத்துதல்.

மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2021 இன் படி, நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத் துறைகளை மேம்படுத்துவதற்கான வெற்றிகரமான மூலோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த மூலோபாயங்களை சுருக்கமாக குறிப்பிடும் போது , "நிலைபேறான வளர்ச்சிக்கு வசதிகளை வழங்கும் செயற்பாடுகளின் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகத் துறையின் விருத்திக்காக உதவுதல்." என்று தெளிவாக உள்ளது.

உதாரணமாக, கொரிய பொருளாதாரம் மற்றும் அதன் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறையின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது யாதெனில், நவீன அறிவை விருத்தி செய்தலின் அடிப்படையில் முக்கியத்துவம் வழங்கி அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கும் முயற்சியாகும். (Gregory et al., 2002) அவ்வாறே, ஜேர்மன் நுண், சிறிய மற்றும் நடுத்தர

அளவிலான வர்த்தகங்களின் வெற்றிக்கு அமைந்த முக்கிய அங்கம் என அறிவிக்கப்பட்டுள்ள (Herr and Nettekoven, 2018) தொழில்சார் பயிற்சி மூலம் வணிக திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கல்வி முறையில் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றங்களின் மூலம் உலக சந்தையில் போட்டியிட தேவையான திறன்களைக் கொண்ட சிறு வணிகங்களை உருவாக்க பங்களிக்கின்றது.

பொருளாதாரத்தில் உள்ள தொழிலாளர் படையணிக்குரிய வேலை தேடுபவர்கள், வர்த்தகர்கள் அல்லது தொழில்முனைவோர்களாக மாறுதல் பொருளாதார முன்னேற்றத்திற்கு காரணமாக அமைகின்றது. அதற்கு உதவும் வகையில் ஒடுக்கப்பட்டுள்ள உள்நாட்டு வணிக வாய்ப்புகளை ஆய்வு செய்து சமூகமயமாக்க வேண்டும் என்பதே இந்த ஆய்வின் அடிப்படை எதிர்பார்ப்பாகும்.
அதன்படி, எளிதில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் உற்பத்தி செய்யக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு

மேற்கொள்ளக்கூடிய வணிகம் இந்த ஆய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

03. வறட்சிப் பீர்க்கு உற்பத்தியால் தொழில் முயற்சியை மேம்படுத்தல்

வறட்சிப் பீர்க்கின் தும்பினால் தயாரிக்கப்படும் பொருட்கள் வெளிநாட்டினரை குறிவைத்து மேற்கொள்ள முடியுமாக இருத்தல் மற்றும் அதன் மூலம் பல நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் என்பன பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு காரணமாகும். அவ்வாறே வியாபாரமாக தொடங்குவதற்காக ஏற்கப்படும் செலவு குறைவாக இருப்பதால், ஆக்கத்திறன் கொண்டவர்களுக்கு வறட்சிப் பீர்க்கின் நாருடன் தொடர்புடைய தயாரிப்புக்களை வியாபாரமாக ஆரம்பிக்க முடியும். மேலும், இந்தப் பயிரினை செய்கை பண்ணுவதன் மூலம் மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் மூலம் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இதனை மற்றைய பயிர்களுக்கிடையில் மேலதிக பயிராக நடுவதனால் பாரிய வருமானத்தை ஈட்ட முடியும்.

செழிப்பாக வளர்ந்த காய்கள் பூக்கள், காய்களுடன் கூடிய கொடி

வறட்சிப் பீர்க்குவின் பல்வேறு நிலைகள்

04. ஆய்வின் நோக்கங்கள்

- உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய சூழல் நட்புறவுடன் கூடிய தயாரிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளை அறிமுகப்படுத்தல்.
- குடும்பத்தின் மாதாந்தச் செலவை சரிசெய்யக்கூடிய குறைந்த செலவுடைய பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு புதிய அபிவிருத்திக்கான பரிமாணத்தை முன்வைத்தல்.
- குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வேலை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தல்.

05. ஆய்வுக்கு உட்படுததப்பட்ட மூலங்கள்

பெயர் :- சுமனா திஸாநாயக்க

முகவரி :- இலக்கம் 18 ஏ, முதலாம் ஒழுங்கை,

பெத்தேகான, புறக்கோட்டை

தொலைபேசி இலக்கம் :- 071 3972766

06. வறட்சிப் பீர்க்குடன் தொடர்புடைய புதிய தயாரிப்புகள்

ஆய்வுக்குட்பட்ட மூலத்துடன் தொடர்புடைய ஆக்கங்களை மேற்கொண்டுவரும் திருமதி சுமனா திஸாநாயக்க அவர்களால் வறட்சிப் பீர்க்கின் உலர்ந்த நார்களைப் பயன்படுத்தி தயாரித்துள்ள அதிகளவு எண்ணிக்கையிலான உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான பேடன்ட் உரிமையையும் பெற்றுள்ளார். வறட்சிப் பீர்க்குவின் நாரினை மூலப் பெருளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள உற்பத்திகளை சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வெளிநாட்டவர்களிடம் அதிக கேள்வி நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக சுற்றுலா ஹோட்டல்களில் காலணிகள் மற்றும் கால் துடைப்பான்களுக்கு அதிக கிராக்கி இருப்பதாகவும், தும்புடன் தொடர்புடைய பிற தயாரிப்புக்களுக்கு வெளிநாட்டவர்களைப் போன்றே உள்நாட்டு சந்தையிலும் அதிக கேள்வி இருப்பதாகவும் அவர் கூறினார். அதன் மூலம் தயாரிக்கப்படுகின்ற பிற ஆக்கபூர்வமான முன்வைப்புக்கள் பல காணப்படுகின்றன.

- காலணிகள் மற்றும் கால் துடைப்பான்
- விளையாட்டுப் பொருட்கள்
- வெசாக் கூண்டுகள்
- கைப்பைகள்
- பூங்கொத்து
- Table mats (மேசை விரிப்புகள்)
- அழங்காரப் பொருட்கள்
- தோலைச் சுத்தப்படுத்தும் பொருட்கள்

மேலும், ஆக்கத்திறன் அடிப்படையில், இந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி வழங்கக்கூடிய பல்வேறு பொருளாதார மதிப்புமிக்க தயாரிப்புகளையும் அறிமுகப்படுத்த முடியும். இந்த தயாரிப்புகள் விரைவாக இத்துப் போகாத மற்றும் நீருக்குத் தாக்குபிடிக்கும் திறன் கொண்டதாக இருப்பதால், அவற்றை நீண்ட காலம் பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கின்றது.

பூக் கொத்து

கைப் பை

வெசக் கூண்டு

காலணிகள்

தோல் சுத்தப்படுத்தும் சாதனம்

கால் துடைப்பான்

07. வியாபார வாய்ப்புகள்

இந்த வறட்சிப் பீர்க்குடன் தொடர்புடைய பல வர்த்தக வாய்ப்புக்கள் உருவாகுவதனைப் போன்றே அநேகமான உற்பத்திகளுக்கு வெளிநாட்டவர்களிடம் கேள்வி நிலவுவதனால் பொருளாதார ரீதியான நலன்களும், இலங்கைப் பொருளாதாரமும் வளர்ச்சியடையும். இதனால் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளாக

- வறட்சி பீர்க்கு விவசாயிகள்
- வறட்சிப் பீர்க்கு சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடுகின்றவர்கள்
- உற்பத்திகளை விற்பனை செய்கின்றவர்கள்

என்றவாறு, நேரடித் தொழில் வாய்ப்புக்களைப் போன்றே உற்பத்தி மூலப் பொருட்களை சேகரித்தல், போக்குவரத்து மற்றும் முடிவுப் பொருட்களின் விநியோகம் போன்ற மறைமுக வேலைவாய்ப்புக்களும் உருவாகின்றன.

08. வறட்சி பீர்க்குகளை பயிரிடல்

வறட்சிப் பீர்க்குச் செய்கையை ஆரம்பிப்பதற்கு பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பது முக்கியமானதொரு விடயமாகும். இதற்காக பெரிய நிலப் பரப்புக்கள் தேவைப்படுவதில்லை. இந்த செடியை மற்ற பயிர்களுக்கிடையே ஊடுபயிராக அல்லது வேலியில் அல்லது பல்லாண்டு காலம் வாழக்கூடிய செடிகளின் மேல் வளர்க்க முடியும். இலங்கையின் உலர் வலயப் பிரதேசங்களில் நன்றாக வளரும் இச்செடி, எந்த காலநிலையையும் தாங்கும் தன்மை கொண்டதால் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் செய்கை பண்ண முடியும். கொடிகள் படர்ந்திருக்கும் பிரதேசத்தில் நன்றாக படர்ந்து செல்லும் தன்மை உள்ளதால் அதன் இலைகள் ஒப்பீட்டளவில் பெரியதாகவும், கடும் பச்சை நிறமாகவும் இருப்பதோடு, அதன் பூக்கள் கடும் மஞ்சள் நிறத்தில்

காணப்படும். இதனால் மற்றைய பயிர்களுக்கும் நிழல் கொடுக்கும் வகையிலும் செய்கை பண்ண முடியும். சேனைப் பயிர்ச் செய்கையில் நிழல் தேவைப்படும் பயிர்களுக்கு வறட்சிப் பீர்க்கின் கொடிகளை படரச் செய்வதன் மூலம் கடுமையான வறட்சிக் காலத்தில் தேவைப்படும் நிழலினை அந்தப் பயிருக்கு வழங்க முடியும். பூச்சிகளின் சேதம் மற்றும் நோய்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதால் இரசாயனப் பொருட்கள் / பசளைகள் இல்லாமல் செய்கை பண்ண முடியும். நீரின் தேவையும் குறைவாக இருக்கும். இதனை உணவிற்காக எடுக்கும் போது முதிர்ச்சி அடைவதற்கு முன்னர், அதாவது பிஞ்சுப் (இளம்) பருவத்தில் அறுவடை செய்தல் வேண்டும். உணவுப் பயிராக அல்லாமல், உற்பத்தி மூலப்பொருளாகப் பெற்றுக் கொள்ள பயிர்ச் செய்கை செய்வதனால் அதிக பொருளாதார அநுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். வறட்சிப் பீர்க்குவின் காய் நன்றாக முற்றியதன் பின்னர் உலர வைத்து இரு பக்கங்களையும் வெட்டி நீக்கி மூன்று நாட்கள் நீரில் வைத்ததன் பின்னர் தோலை நீக்கிய பின் நாரின் வெள்ளை நிறத்தைப் பாதுகாக்கும் வகையில் பெற்றுக் கொள்ளலாம். நன்றாக வளர்ந்த சராசரி

அளவுடைய காயினால் பெற்றுக் கொள்ள முடியுமான தும்பினை ரூபா. 20 இற்கும் மேற்பட்ட விலைக்கு விற்கலாம்.

09. வறட்சிப் பீர்க்குடன் தொடர்புடைய உற்பத்திகளின் போது எழும் பிரச்சினைகள்

- பொருட்களைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களின் பற்றாக்குறை.
- செய்கையில் உள்ள பொருளாதாரப் பலன்களை விவசாயிகள் அறிந்திருப்பதில்லை.
- தயாரிப்புக்கள் பற்றிய விழிப்புணர்வு உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் காணப்படாமை.
- உற்பத்தியை மேற்கொள்வதற்கான பயிற்சியை வழங்கக்கூடிய பயிற்சியாளர்களின் பற்றாக்குறை மற்றும் இருக்கக்கூடிய பயிற்சியாளர்கள் பற்றிய தகவல் காணப்படாமை.

10. தீர்வுகளும் முன்மொழிவுகளும்

- உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வறட்சிப் பீர்க்குவின் செய்கையை ஊக்குவித்தல்.
- கமநல சேவை அலுவலகங்கள் மூலம் இச்செய்கை பற்றிய தேவையான தொழில்நுட்பம் மற்றும் அறிவை வழங்குதல்.
- பயிர்ச் செய்கையில் உள்ள பொருளாதார நன்மைகள் மற்றும் பயிரிடலில் உள்ள இலகு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு பயிரிடக்கூடிய நிலத்தை வழங்குதல்.
- இந்த உற்பத்திப் பொருட்கள் தொடர்பில், அவற்றின் சுற்றுச்சூழல் நட்புறவு மற்றும் பொருளாதார நன்மைகள் பற்றி உள்நாட்டு நுகர்வோருக்கு விழிப்புணர்வூட்டல்.
- தேவை மற்றும் ஆக்கத்திறனுள்ள நபர்களை பிரதேச ரீதியாக அடையாளம் கண்டு பயிற்சியாளர்களாக அவற்றில் ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கைளை எடுத்தல்.

11. பயிர்ச் செய்கைக்கான தேவைப்பாடு

வறட்சிப் பீர்க்குச் செய்கை தொடர்பில் விவசாயத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட செய்கை முறையொன்று இல்லாவிடினும், அந்த இனத்தைச் சேர்ந்த விளிம்புள்ள பீர்க்குச் செய்கை தொடர்பாக விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று விளிம்புப் பீர்க்குச் செய்கையின் சிபாரிசினை வறட்சிப் பீர்க்குச் செய்கைக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியும்.

வறட்சிப் பீர்க்குக் கொடியின் ஆதரவின் அடிப்படையில உலர்ந்த காய்கள் மற்றும் விதைகள்

- ***காலநிலைத் தேவைகள்***

  வெப்பமான காலநிலையை விரும்பும் ஒரு பயிராகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 500 மீட்டர் வரையிலான பகுதிகளில் இந்த பீர்க்குச் செடிகள் நன்றாக வளர்கின்றன. அதிக

மழையுடன் கூடிய வானிலை இந்தப் பயிர்ச் செய்கைக்கு சாதகமானதல்ல..

- ***மண்***

  நன்றாக நீர் வழிந்தோடும் சேதனைப் பொருட்களைக் கொண்ட மணல் கலந்த மண் செய்கைக்குப் பொருத்தமானது. மண்ணின் பி எச் பெறுமானம் pH 5.5 - 7.5 ஆக இருத்தல் வேண்டும்.

- ***செய்கைக் காலம்***

  ஈர வலயத்தில் வருடம் பூராகவும், உலர் வலயத்தில் பெரும் போகத்திலும் பிரதானமாக பீர்க்குச் செய்கை பண்ணப்பட்டாலும், உலர் வலயத்தில் வருடம் பூராகவும் இந்த வறட்சிப் பீர்க்குச் செய்கையை மேற்கொள்ள முடியும். இது விளிம்புள்ள பீர்க்குவைப் போன்றே நீர் வழங்கல் தேவையற்ற ஒரு பயிர் என்பதனாலாகும்.

- ***நிலத்தை தயார்படுத்தல்***

நிலத்தைப் பிரட்டி மண் திட்டுக்களை உடைத்து அதன் பின்னர் 30*330*30* செ.மீ. அளவுள்ள குழிகளை சீரான இடைவெளியில் தரையில் நீர் நிற்காதபடி நிலத்தை தயார் செய்ய வேண்டும்.

- ***பயிர்களுக்கிடையிலான இடைவெளி***

  இதற்கு சுமார் 1.5 * 1.5 மீட்டர் பொருத்தமானது. ஆனால் பெரிய அளவுடைய மரங்களின் உதவியுடன் கொடிகளை பரப்பும் வகையில் பயிரிடுவதாயின், இந்த இடைவெளிகள் ஏற்புடையதற்றது.

- ***விதைகளை நடுதல்***

  தயார் செய்யப்பட்ட குழிகளில் ஒரு கூடை நன்கு அழுகிய சேதனப் பசளையை இட்டு, மேற்பரப்பு மண்ணுடன் கலந்து நிலத்தை தயார் செய்து ஒரு குழியில் 3 -4 விதைகள் வீதம் இட்டு மூடுதல் வேண்டும்.

- ***செடிகளைக் குறைத்தல்***

  விதைகள் முளைத்து 2 வாரங்களுக்குப் பின்னர், ஒரு இடத்தில் 2 செடிகளை மட்டும்

விட்டுவிட்டு, மீதமுள்ளவற்றை பிடுங்கி எடுத்தல்.

- ***கொடிகளை திசைப்படுத்தல்***

  வறட்சிப் பீர்க்குச் செடிகளை பெரிய மரங்கள் மற்றும் செடிகளை கம்பு வேலிகளில் மற்ற பயிர்களுக்கு நிழல் தரும் ஊடுபயிராகவும் பயிரிடலாம்.

- ***பசளையிடல்***

  இதற்கு பிரத்தியேகமான பசகைள் எதுவும் இடத் தேவையில்லை என்றாலும் இலைக் குப்பைகளைச் சேர்த்து சேதனப் பசளைகளை இடுவது போதுமானதாகும்.

- ***பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு***

  வறட்சிப் பீர்க்கில் பூச்சிகளின் தாக்கம் குறைவாக இருப்பதனால் அதற்காக தனியான பூச்சி கொல்லிகள் எதுவும் பயன்படுத்தத் தேவையில்லை.

12. விற்பனை விலையும் வருமானமும்

தற்போது, உள்நாட்டு உற்பத்தியில் பொருளாதார மதிப்பு மிகவும் உயர்வாக இருப்பதனால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைப் போன்றே உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மத்தியிலும் அதிக கேள்வி எழுந்துள்ளது. வறட்சிப் பீர்க்குடன் தொடர்புடைய தயாரிப்புக்களை கொள்வனவு செய்யும் போது பின்வரும் வகையில் வருமானம் ஈட்ட முடியும். (2022 ஆம் ஆண்டின் விலையை அடிப்படையாகக் கொண்டது.)

உற்பத்திப் பொருள்	விலை
பாதணிகள்	750.00
கால் துடைப்பான்	1000.00 – 1500.00
கைப்பைகள்	600.00 – 2000.00
வெசாக் கூண்டுகள்	500.00
தோலைச் சுத்தப்படுத்தும் சாதனங்கள்	500.00
விளையாட்டுப் பொருட்கள்	500.00 – 1000.00

பூங்கொத்து	500.00 – 1000.00
அழங்காரப் பொருட்கள்	500.00 – 1000.00
Table mats (மேசை விரிப்புகள்)	500.00 – 1000.00

இந்த உற்பத்திப் பொருட்களை வாங்கி விற்கும் விற்பனையாளர்களை உருவாக்குவதன் மூலம் வருமான வழிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது. சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வெளிநாட்டவர்களை இலக்காகக் கொண்டு அதனை அண்டியுள்ள சிறிய கடைகளின் உரிமையாளர்களும் இந்த உள்நாட்டுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளை ஈட்ட முடியும். மேலும், இது தொடர்பில் விருப்பம் மற்றும் ஆக்கபூர்வமான திறன்களைக் கொண்டவர்களுக்கு இலங்கையின் எந்தப் பகுதியில் இருந்தாலும் பயிற்சியளிப்பதற்கு இந்த உற்பத்தியில் ஈடுபடும் திருமதி சுமனா திஸாநாயக்க அவர்களுக்கு முடியுமாக உள்ளது.

13. திணைக்கள எதிர்பார்ப்பு

தொழிலாளர் சந்தையில் தொழில்முனைவோருக்கான வாய்ப்புக்களை அதிகரித்து, வேலைவாய்ப்பளிக்கவும் வருமானம் ஈட்டக்கூடிய திறன்களை அதிகரிக்கவும், உசிதமான முதலீட்டு வாய்ப்புக்களை தொழில்முனைவோருக்கு அறிமுகப்படுத்தலை இலக்காகக் கொண்ட ஆய்வுத் திட்டத்தின் ஒரு விளைவாக இதனைக் குறிப்பிட முடியும். இந்த அறிக்கை தங்களுக்கு முன்வைக்கப்பட்டு தங்களினதும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் இந்த வாய்ப்பு பயன்படுத்தப்படும் என மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

ஆதாரம் :-

மத்திய வங்கி ஆண்டறிக்கை 2021

https://life.nethtv.com/2019/08/27

Sinhala: HORDI Crop – Luffa – Department of Agriculture Sri lanka (doa.gov.lk)